---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

என்எஸ்பீ பண்ட் மெனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட்டின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பெருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா ஏர்லைன்ஸ் திட்டத்தின் மறுசீரமைப்பிற்கான முன்னணி முகாமையாளராக நிறுவனத்தை நியமித்தது தொடர்பாக பொது திறைசேரியில் இருந்து பெற வேண்டிய மொத்த மீதியான ரூபா 246,939,587 ஆன மீதியில் மொத்த பெற வேண்டிய மீதியில் 36 சதவீதத்திற்கு சமனான ரூபா 88,939,587 தொகை 2016 ஆம் ஆண்டு முதல் எதுவித அறவீடுமின்றி நிலுவையாக காணப்பட்டது. | நிலுவையை மீட்பதற்கு NSBFMC அதன் மட்டத்தில் சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுத்துள்ளது. அனைத்து துணை ஆவணங்களுடனும் கூடிய சமீபத்திய கடிதம் 08.01.2025 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு II).<br><br>27.05.2025 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது எயார் லங்கா பெற வேண்டியவைக்காக 12 மாத நிதி ஏற்பாட்டினை மேற்கொள்ள பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது. தயவுசெய்து பின்னிணைப்பு | மேலும் தாமதமின்றி நிலுவை தொகையை மீள அறவிடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுவனம் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | III இல் இணைக்கப்பட்டுள்ள சபையின் கூட்ட அறிக்கையை பார்வையிடவும்.<br><br>பொறுப்புடைய உத்தியோகத்தர் - கணக்காளர் | |
| (ii) | வருமான வரி கூடுதலாக செலுத்தப்பட்டமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் ரூபா 67,401,151 ஆன பெற வேண்டிய வருமான வரி மீதியொன்று நிலவியது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம், மேலதிக கொடுப்பனவுகளுக்கு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>பொறுப்புடைய உத்தியோகத்தர் - கணக்காளர் | நிலுவை தொகையை மீள அறவிடுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுவனம் எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2006 இன் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனைகளை அறிக்கையிடும் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2016 இன் 1 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (நுகர்வோர் தகுதிச் சரிபார்ப்பு) விதிகளின் 17 ஆம் விதி | அனைத்து நிதி நிறுவனங்களும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவர் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியதுடன், அவர் நிதி நிறுவன அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் இந்த சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க செயற்படுவதனை சான்றுபடுத்துவதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டிய போதிலும், மேற்படி தேவைப்பாடுகளை நிறைவேற்றும் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | தற்போதைய இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் 2022.11.02 ஆந் திகதி முதல் என்எஸ்பி நிதிய முகாமைத்துவக் கம்பனியின் நிறைவேற்று பணியொன்றாகவும் KMP ஆக அந்த பதவியில் செயற்படுகின்றார். அவர் குறித்த பதவிணில் தொடர்ந்தும் செயற்படுவதற்கு அவரது தகைமை மற்றும் உரித்து வருடாந்த அடிப்படையில் CBSL இற்கு சமர்ப்பிக்கப்படும்.<br><br>NSB இணக்கப்பாட்டு பிரிவின் தகைமை வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிந்துரைக்கப்பட்ட விடயம் NSB FMC இன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான | அதிகாரச்சட்டம் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவைக்காடுகளை பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு கம்பனிக்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் வரை, தற்போதைய உத்தியோகத்தர் இணக்கப்பாட்டு உத்தியோகத்தராக NSB FMC இல் கடமைகளில் மேவுகை செய்கின்றார். பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் / குழு – BIRMC. | |
| (ii) | 2006 இன் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனைகளை அறிக்கையிடும் அதிகாரச்சட்டத்தின் 14(1)(ஆ)(iv) ஆம் பிரிவு | சந்தேகத்திடமான பரிவர்த்தனைகள் அல்லது வியாபார நடவடிக்கைகளை அறிக்கையிடுவதற்கு கம்பனியால் பொருத்தமான பொறிமுறையொன்று அல்லது செயல்நடவடிக்கைகளுடனான கட்டமைப்பொன்றை நிறுவி பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நுழைவின் போது நுகர்வோரின் பரிசோதனைக்கு வசதியேற்படுத்தி கொடுத்தல், நிலவும் நுகர்வோர் தளத்தினை அவ்வப்போது பரிசோதித்தல், மற்றும் ஒவ்வொரு முதலீடுகளுக்காகவும் நிதியத்தின் மூலத்தினை மெய்மையாய்வு செய்வதன் மூலம் பரிவர்த்தனையாளர்களை தொடர்ச்சியாக அவதானிப்பதற்காக NSB FMC இனால UNSCR திரையிடல் தீர்விற்கு (திசைக்காட்டி கட்டமைப்பு) நுழைவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.. அதற்கு மேலதிகமாக AML கொள்ளையில் விபரிக்கப்பட்டுள்ள STR செயல்நடவடிக்கையொன்று காணப்படுவதுடன், ஒருங்கிணைப்பு நடவடிக்கை நிறைவு செய்யப்படும் வரை AML கட்டமைப்பொன்றினை சுவீகரித்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளது. தயவு செய்து பின்னிணைப்பு IV இல் இணைக்கப்பட்டுள்ள கூட்ட அறிக்கையை பார்க்கவும். STR பதிவு செய்யும் பணிக்கு உதவுவதற்கு STR | சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்காணுவதற்காக கம்பனி தன்னியக்க கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பதிவேட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் | |
| (iii) | பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் (AML மற்றும் CFT) கொள்கையின் பிரிவு 08 | குறைந்த, நடுத்தர மற்றும் உயர் என வகைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களின் ஆபத்து நிலை முறையே ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு முறை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படவில்லை. | இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஒவ்வொரு மாதமும் அதிக ஆபத்துள்ள வாடிக்கையாளர்களின் நிலையை மீளாய்வு செய்கிறார். ML/TF ஆபத்து மதிப்பீட்டு செயல்முறையின் ஒரு பகுதியாக அனைத்து உயர், நடுத்தர மற்றும் குறைந்த ஆபத்துள்ள வாடிக்கையாளர்களிடமும் ஆண்டுதோறும் பகுப்பாய்வு நடத்தப்படுகிறது.<br><br>NSB FMC இன் AML கொள்கையின் பிரகாரம், நடுத்தர மற்றும் குறைந்த ஆபத்துள்ள வாடிக்கையாளர்களின் ஆபத்துகளை தரப்படுத்தல் மதிப்பீடுகள் மேலும் மீளாய்வுக்கு உள்ளாகியுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர இணங்கப்படும்.<br><br>2024 ஆம் ஆண்டிற்கான பின்னிணைப்பு V - ML/TF மதிப்பீட்டு அறிக்கையைப் பார்க்கவும்.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் | கம்பனி தொடர்புடைய பிரமாணங்களுக்கு இணங்க வாடிக்கையாளர்களின் ஆபத்து நிலை மதிப்பிடப்பட வேண்டும். |

**1.7 தகவல் தொழில்நுட்பம் பொதுவான கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனி தற்போது அதன் காப்புப்பிரதி நடைமுறையை கைமுறையாகச் செய்கிறது. எனவே, தானியங்கி காப்புப்பிரதி கட்டமைப்பு இல்லாததால் மனித பிழைகள் மற்றும் சாத்தியமான மீட்பு சிக்கல்கள் ஏற்படுவதற்கான அதிக சாத்தியம் ஏற்படுத்தக்கூடும் என்பதுடன், இதன் விளைவாக தரவுகளின் துல்லியதன்மையில் அதிக அபாயம் ஏற்படுத்தும். | UAT தற்போது நடைபெற்று வருவதுடன், 31.07.2025 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் | மனித பிழைகளின் அபாயத்தைக் குறைக்கவும், தரவு ஒருமைப்பாட்டை மேம்படுத்தவும், தோல்விகள் அல்லது பிற எதிர்பாராத சம்பவங்களில் சரியான நேரத்தில் மற்றும் நம்பகமான தரவு மீட்டெடுப்பை உறுதி செய்ய கம்பனியின் காப்புப்பிரதி நடைமுறை தன்னியக்கப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | கம்பனியின் Efixin கட்டமைப்பு SWIFT கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டிராத காரணத்தால், முழுமையாக தன்னியக்க நடைமுறையொன்று இல்லாதிருந்த காரணத்தால் SWIFT கட்டமைப்பிற்கு தவறான தகவல்கள் உள்ளிடப்படுவதற்கான அதிகபட்ச இயலுமை காணப்படுகின்றது. | நிலவும் கட்டமைப்பின் குறைபாடுகளை திருத்துவதற்கு NSB FMC அதில் நிலவும் கட்டமைப்பு மேம்படுத்தப்படுகின்றது. T-பட்டியல் பிணைமுறிகள் மற்றும் Repo ஆகியவற்றின் சில்லறை வாடிக்கையாளர்களுக்காக Swift குறுஞ்செய்தி தன்னியக்க முறைமை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. பின்னோக்கிய repo தன்னியக்க முறைமை, repo இற்கான பிணையங்களின் மீளழைப்பு மற்றும் மாற்றீடு மற்றும் முழுமையான கொடுக்கல் வாங்கல்கள் நிலவும் கட்டமைப்புடன் மேம்படுத்தும் நடைமுறை இடம்பெற்றவாறு உள்ளது. இந்த குறுஞ்செய்தி தன்னியக்கப்படுத்தல் செயற்பாடானது 31.08.2025 ஆந் திகதி நிறைவு செய்யப்படும்.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - தகவல் தொழில்நுட்ப முகாமையாளர | முழுமையான தன்னியக்கப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்று இல்லாதிருந்தமையின் பாதகமான தன்மையை தடுப்பதற்காக தன்னியக்க நடைமுறையை துரிதப்படுத்த பரிந்துரைக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2024 ஏப்ரல் 29 ஆந் திகதி சபையால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப செயற்குழுவின் திருத்தப்பட்ட விதிகள் (TOR) இன் பிரகாரம் தொழில்நுட்ப செயற்குழு காலாண்டு ரீதியாக கூட்டப்பட வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டினுள் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><br>NSB FMC என்பது NSB இன் முழுமையான துணை நிறுவனமொன்றாவதுடன், அது NSB இன் டொமைன் வசதியின் கீழ் செயற்படுகின்றது. இதன் காரணமாக NSB FMC IT பிரிவின் இரு பிரதிநிதிகள் செயற்குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், NSB அவர்களின் ஒத்த வங்கிக் கட்டமைப்பினை மாற்றியமைத்தமையால் NSB பிரதிநிதிகளுக்கு ITSC கூட்டங்களுக்கு பங்குபற்ற முடியாதிருந்தது.<br><br>இந்த தங்கியிருத்தல் அகற்றுவதற்கு NSB FMC இனால் ITSC TOR நாளதுவரையாக்கப்பட்டதுடன், NSB IT முகவர்களின் கட்டாய பங்களிப்பு திருத்தப்பட்டு ‘‘அழைப்பினூடான பிரதிநிதித்துவம்’’ சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2025 ஆம் ஆண்டில் இதுவரை இரு கூட்டங்கள் 06.02.2025 மற்றும் 23.06.2025 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளன.<br><br>ITSC இன் விதிகளுக்கமைய எஞ்சிய இரு கூட்டங்களை 2025 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.<br><br>தயவுசெய்து பின்னிணைப்பு VI-ITSC கூட்டக் குறிப்புரையை பார்க்கவும்.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம். | கம்பனியால் உரிய கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் தொடர்புடைய விதிமுறைகளுக்கு (TOR) இணங்க கூட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 958,175,255 இற்கான இலாபமொன்று காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,641,605,934 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 683,430,679 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக வட்டி வருமானம் ரூபா 780,095,266 இனால் அதிகரித்திருந்த போதிலும், நிதி கருவிகளின் நியாயப் பெறுமதியை சீராக்கியமையால் இனங்காணப்பட்ட தேறிய இலாபம் ரூபா 1,395,730,084 இனால் குறைவடைந்தமையும் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களை கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு, அதிகரிப்பு மற்றும் குறைவிலான சதவீதத்துடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | விலகல் - சாதகமான / (பாதகமான) ரூபா | விலகல் (%) | விலகலுக்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 615,634,818 | 20% | முதலீட்டு தொகுதியின் அதிகரிப்பு |
| தேறிய வட்டி வருமானம் | 254,633,925 | 26% | முதலீட்டு தொகுதியின் அதிகரிப்பு காரணமாக வட்டி வருமானத்திலான அதிகரிப்பு |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | (6,298,600) | (45%) | நுகர்வு ஏல விலைக்கேள்விகளில் கட்டண வருமானம் குறைவடைந்தமை மற்றும் சில நம்பிக்கைப் பொறுப்பு பணிகளை பூர்த்தி செய்தமை. |
| FVTPL இன் நிதி கருவிகளின் தேறிய வியாபார இலாபம் / (நட்டம்) | (1,395,730,084) | (61%) | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 13.6 சதவீதம் முதல் 2024 ஆம் ஆண்டினுள் 9.91 சதவீதம் வரையிலும் முதலீட்டு தொகுதியின் சராசரி வியாபார விகிதம் வீழ்ச்சியடைந்த காரணத்தால் தீர்வையாகாத இலாபத்திலான குறைவு |
| ஆளணிக் கிரயம் | 35,692,667 | 51% | புதிய ஊக்குவிப்புக் கொள்கைக்கு இணங்க சம்பள திருத்தங்களுடன் 05 மாத செயலாற்றல் ஊக்குவிப்பு நிதியேற்பாடுகளில் வழங்கப்பட்ட சம்பளம் அதிகரித்தமை. |
| ஏனைய செலவினங்கள் | 64,975,763 | 111% | திறைசேரிக் கட்டமைப்பிற்காக ரூபா 53 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படல் மற்றும் தரகுச் செலவினம் மற்றும் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் அதிகரித்தமையின் காரணத்தால். |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2024** | **2023** |
| உரிமையாண்மை மீதான வருவாய் (%) | 15.97 | 29.8 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 5.39 | 9.7 |
| இடர் நிறையிடப்பட்ட மூலதன போதுமான விகிதம் - (ஆகக் குறைந்த தேவைப்பாடு – 10%) | 27.6 | 21.3 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 மார்ச் மாத இறுதிக்குள் ஒரு புதிய திரைசேறி முகாமைத்துவ கட்டமைப்பை செயல்படுத்துவதற்காக, கம்பனி இந்தியாவில் உள்ள கிரெடென்ஸ் அனலிட்டிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதுடன், ஏற்கனவே ரூபா 53,833,248 தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 267,131 தொகையான முன்பணத்தை செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும், தேவையான சேவைகளை வழங்குவதில் விற்பனையாளரினால் மேற்கொள்ளப்பட்ட தாமதம் காரணமாக மற்றும் நிலவும் கட்டமைப்பினை மேம்படுத்திய காரணத்தால் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. ரூபா 53,833,248 தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதுடன் அது சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை அறவிடுவதற்கு கம்பனியால் இதுவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. | NSBFMC இன் பணிப்பாளர் சபை NSB இன் சட்டப் பிரிவிடம் சட்ட ஆலோசனை பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>சபையின் ஆலோசனையின்படி, NSB FMC இந்த விடயத்தை NSB இன் சட்டப் பிரிவுக்கு பரிந்துரைத்தது. இந்த விடயத்தில் ஆலோசனை பெறுவதற்காக NSB இன் சட்டப் பிரிவு இந்த விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.<br><br>சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைக்கமைய ஆலோசனையின் அடிப்படையில் கிரெடென்ஸ் பகுப்பாய்வுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொருள் ரீதியான மோசடிகள் தொடர்பான விபரங்கள்.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் | கம்பனி விற்பனையாளரிடமிருந்து இழப்புகளைக் கோர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015/16 மதிப்பீட்டு ஆண்டிற்கான உழைக்கும் போது செலுத்தும் வரியை தாமதமாக செலுத்தியதால், கம்பனிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 467,612 ஆன அபராதம் செலுத்த வேண்டியுள்ளது. | 2015/2016 (2015 ஏப்ரல் முதல் 2016 மார்ச் வரை) காலத்திற்கான NSB நிதிய முகாமைத்துவக் கம்பனியின் தொழில்சார் படிகளுக்காக செலுத்துபவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கி (NSB) இனால் அவர்களின் TIN இலக்கம் 409046266 இன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>NSB நிதியக் கம்பனி தனித்தனியே TIN எண்ணின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால், தொழில்முறை கொடுப்பனவுக்கான PAYEE ஆனது 2016 ஏப்ரல் முதல் NSB FMC ஆல் செலுத்தப்படுகிறது.<br><br>தயவு செய்து NSBFMC இலிருந்து IRD க்கு சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பு VIII - கடிதத்தைப் பார்க்கவும்.<br><br>பொறுப்பான அதிகாரி - கணக்காளர் | கம்பனி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி பிரச்சினையை தீர்க்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு அதற்கடுத்த தகைமைபெறும் பதிலீட்டு உத்தியோகத்தரை நியமித்து தக்கவைத்துக் கொள்ள கம்பனி தவறிவிட்டது, மேலும் அந்த பதவிக்கு பொருத்தமான நபரை ஈர்க்கவும் தேர்ந்தெடுக்கவும் கம்பனிக்குள்ள இயலாமை காரணமாக பிரதம முகாமையாளர் பதவி தொடர்ந்து வெற்றிடமாக | NSB FMC இல் தற்போது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு பதிலீட்டு உத்தியோகத்தராக சிரேஷ்ட முகாமையாளர் ஒருவர் (NSB இலிருந்து இரண்டாம் நிலை) காணப்படுகின்றார்.<br><br>பொறுப்பான குழு - BHRCC/BOD | நீண்ட காலத்திற்கு நிறைவேற்று உத்தியோகத்தர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாத்திரம் உரிய கணக்காய்வு அனுபவங்களை கொண்ட 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வேலைவாய்ப்பற்றிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் கம்பனியால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். கம்பனியொன்றின் வலுவான உள்ளகக் கட்டுப்பாடு, ஆக்கபூர்வமான இடர் முகாமைத்துவம் மற்றும் சிறந்த நிர்வாக முறைமையை சான்றுபடுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வு பணிகள் முக்கிய வகிபாகத்தினை நிறைவேற்றுகின்றது. அதனால் நீண்ட காலம் தொழில்சார் அனுபவமற்ற மற்றும் அண்மைய காலத்தில் தொழில் சார்ந்த பங்களிப்பற்ற விண்ணப்பதாரியொருவரை கம்பனியின் முக்கிய பதவியொன்றில் நியமித்தமை கம்பனியின் உத்தேச செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கமளிக்கக்கூடும். மேலும், முன்னைய கணக்காய்வுகளில் கம்பனியின் கவனத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள ஒத்த ஆட்சேர்ப்புகள் அவதானிக்கப்பட்டன. | தற்போது வெளிவாரித் தரப்பினரால் NSBFMC இன் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதுடன், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு, கம்பனி முதலீட்டு உதவியாளர் III தரத்திற்கு ஒரு உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.<br><br>NSBFMC இன் SOR இன் படி உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார். உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் நியமனம் ஆறு மாத ஒப்பந்த காலத்திற்கு உட்பட்டது. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் BAC க்கு அறிக்கை அளிப்பார். எதிர்பார்க்கப்படும் செயலாற்றல் மட்டத்தினை கம்பனியின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்காத போது பணியின் தொடர்ச்சி BAC ஆல் தீர்மானிக்கப்படும்.<br><br>பொறுப்பான உத்தியோகத்தர் - BAC/BHRCC | விரிவான தூண்டுதல், உயர் கிரயம் அவசியமான மற்றும் முதன்மை கையாளுதல் செயல்பாடுகள் போன்ற விசேட துறைகளுக்கு இணங்குவதற்கு கணிசமான நேரம் தேவைப்படும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது கம்பனி அதிக அக்கறை காட்ட வேண்டும். அதே போல், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், இந்த விசேட துறைகளிலும் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்கு கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களில் தற்போதைய ஊழியர்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் போது நுகர்வோரின் வசதிக்காக தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்துவதற்கு கம்பனி திட்டமிட்டிருந்த போதிலும், 2025 மே 31 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | NSB FMC இன் உள்ளக திறைசேரி கட்டமைப்பு மற்றும் அதன் நுகர்வோர் முகாமைத்துவ கட்டமைப்பு (CMS) மேம்படுத்தப்பட்டவாறு இருந்தது. மேம்படுத்தல் நிறைவு செய்யப்பட்டவுடன் 2026.03.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை | உத்தேச நிகழ்ச்சித்திட்டங்கள் கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்படும்.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் | |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வெளிவாரி உள்ளகக் கணக்காய்வாளர் மாதாந்தம் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதாக இணங்கியிருந்த போதிலும், அறிக்கைகள் தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்படவில்லை. விசேடமாக, 2024 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையிலுமான மாதங்களுக்குரிய கணக்காய்வு அறிக்கைகள் 2025 யூன் 13 ஆந் திகதி கணக்காய்வுக் குழச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவற்றின் விசாரணை காலப்பகுதிகளில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவான தாமதங்கள் நிலவின. | NSB FMC இனால் 2025.06.16 ஆந் திகதி அன்று கணக்காய்வுக் குழு சபையின் கூட்டமொன்று நடாத்தப்பட்டு 2024 திசெம்பர் வரை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், 2025 மே மாதம் வரையிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு உள்ளகக் கணக்காய்வு (E & Y) இற்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் - உள்ளகக் கணக்காய்வாளர் | கணக்காய்வு கம்பனி வெளிவாரியாக பெற்றுக்கொண்ட சேவை வழங்குநரிடமிருந்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை சரியான நேரத்தில் பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |